DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.68/2025

Deposition of Witness : LW1/PW1

| | | | |
|---|---|---|---|
| Name | மணி | Taluk | |
| Father's Name | நடேசன் | Village | |
| Age | | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 08.**10.2025.** | | | |

( Accused 1, 2 present)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய காவலர் திரு. தயாநிதி HC அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை** :

நான் தற்போது பண்ருட்டி, மருங்கூர் காலனியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சிகள் குப்புசாமி, பிரவின், ரமேஷ், அன்பரசு ஆகியோர்கள் எனது உறவினர்கள். ஆஜர் எதிரிகள் எனது பங்காளிகள். சுமார் 1 வருடத்திற்கு முன்னர் ஒருநாள் மாலை வேளையில் நானும், எனது அண்ணன் மகன் குப்புசாமி என்பவரும் எங்கள் வீட்டில் இருந்தபோது, எங்கள் தெருவில் 10 க்கும் மேற்பட்ட நபர்கள் கும்பலாக சண்டை போட்டுக்கொண்டிருந்த சத்தம் கேட்டு, நாங்கள் வெளியே சென்று பார்த்தபோது, கும்பலில் இருந்த யாரோ இருவர் எங்களை அசிங்கமாக திட்டி, தடியால் தாக்கிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள். மேற்படி கும்பலாக சண்டை போட்ட நபர்கள் யார் என்றும், எங்களை அசிங்கமாக திட்டி, தாக்கிய நபர்கள் யார் என்றும், எதற்காக அவ்வாறு செய்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. மேற்படி அடிப்பட்ட என்னை எனது பேரன் அன்பரசு பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார். குப்புசாமிக்கு காயங்கள் இல்லாததால் அவர் சிகிச்சை மேற்கொள்ளவில்லை. நான் மேற்படி சண்டை சம்மந்தமாக தகவல் சொல்ல முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையம் சென்றபோது அங்கிருந்த போலிசார் என்னிடம் எழுதாத ஒரு வெள்ளை தாளில் இடது பெருவிரல் ரேகை வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள இடது பெருவிரல் ரேகை தான் அது. **(மேற்படி இடது பெருவிரல் ரேகை மட்டும் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இதை தவிர எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

ஆஜர் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதானம் ஆகிவிட்டேன் என்று சொன்னால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் கடந்த 29.02.2024 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது, எதிரி அவினேஷ் எனது வீட்டின் முன்பு உள்ள ரோட்டில் நின்று அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார் என்றும், அதற்கு நான் எதிரி அவினாஷை பார்த்து ஏன் இங்கு நின்று கொண்டு பேசுகிறாய், யாரை பேசுகிறாய் என்று கேட்டதற்கு என்னை அசிங்கமாக திட்டி, நீ யாரடா என்னை கேட்பது என்று கூறி, தடியால் எனது இடது பக்க தலையில் அடித்தார் என்றும், அப்போது எனது அண்ணன் கோபால் மகன் குப்புசாமி என்பவர் வந்து சண்டையை விலக்கியபோது அவரை அவினேஷின் அப்பா சிவலோகநாதன் என்பவர் அசிங்கமாக திட்டி, அவரது கையால் நெட்டி கீழே தள்ளிவிட்டார் என்றும், மேற்படி சம்பவம் பிரவீன் மற்றும் ரமேஷ் ஆகியோர்களுக்கு தெரியும் என்றும், மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி நான் 01.03.2024 அன்று முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதானம் ஆகிவிட்டதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை.**